வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.4192/ஆ5/2024, நாள். 18.10.2024

.....

பொருள் பள்ளிக் கல்வி – தேர்தல் – வேலூர் மாவட்டம் – தேர்தல் எழுத்தறிவு (ELC) – பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு சுவர் இதழ் மற்றும் கட்டுரை போட்டிகள் (Wall Magazine and Essay Writing) நடத்துதல் – தொடர்பாக

பார்வை வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் ஆட்சித் தலைவர் அவர்களின் கடித ந.க.எண். எச்2/109/2024, நாள். 04/09/2024

.....

பார்வையில் காணும் கடிதத்தில், தேர்தல் எழுத்தறிவு (Electoral Literacy Clubs) பள்ளி மாணவ / மாணவியர்களுக்கிடையே பிரபலப்படுத்துவதற்காக பள்ளிகளில் 18 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியருக்கு **"வாக்களிப்பதே சிறந்தது – நிச்சயம் வாக்களிப்பேன்" ("Nothing like Voting – I Vote for Sure")** என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இணைப்பில் காணும் 25 பள்ளிகளில் பயிலும் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ / மாணவியர்களுக்கு சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் வரைதல் மற்றும் கட்டுரை போட்டிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நடத்தப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேற்படி போட்டிகள் நடத்துதல் தொடர்பான விளக்கங்கள் கீழ்காணும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது–**

1. ஒவ்வொரு பள்ளியிலும் ஏற்கனவே தேர்தல் எழுத்தறிவு (Electoral Literacy Clubs) தொடர்பாக ஒருங்கிணைப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளது. அவர்களின் தலைமையில் பள்ளிகளில் இப்போட்டி நடத்தப்படவேண்டும்.
2. மேற்படி போட்டிகள் அனைத்தும் **"வாக்களிப்பதே சிறந்தது – நிச்சயம் வாக்களிப்பேன்" ("Nothing like Voting – I Vote for Sure")** என்ற கருப்பொருளை மையமாக கொண்டு நடத்தப்பட வேண்டும்.
3. இணைப்பில் உள்ள 25 பள்ளிகளில் 9, 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களிடைய சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் வரைதல் மற்றும் கட்டுரை போட்டிகளை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) சம்மந்தப்பட்ட பள்ளி வளாகத்தில் வைத்து நடத்த வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் அதிகபட்ச மாணவர்கள் போட்டியில் கலந்துக் கொள்ள வேண்டும்.
4. சுவரொட்டி வடிவில் இதழ் வரைதல் மற்றும் கட்டுரை போட்டிகளுக்கு (தமிழ் மற்றும் ஆங்கிலம்) தேவையான உபகரணங்கள் சம்மந்தப்பட்ட பள்ளி நிர்வாகம் வழங்கலாம் அல்லது மாணவ / மாணவியரே வாங்கிக் கொள்ளலாம். மேற்படி சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் வரையும் போது A3 தாள் அல்லது சார்ட்களை இரண்டு பகுதிகளாக பிரித்துக் கொண்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படும் மாதிரி படத்தில் உள்ளவாறு முதல் மேற்பகுதியில் வரைப்படங்கள் வரையவும் இரண்டாவது கீழ் பகுதியில் மேலே வரையப்பட்ட வரைப்படத்திற்கான விளக்கத்தினை 50 முதல் 100 வார்த்தைகளுக்குள் தெரிவிக்கலாம். மேற்படி சுவரொட்டி வடிவில் இதழ் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எழுதலாம்.

5. கட்டுரை போட்டி தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பள்ளி அளவில் நடத்தலாம். கட்டுரை எழுதுவது 100 வார்த்தைகளில் இருக்க வேண்டும். (1 Paragraph Only)
6. மேற்படி போட்டியில் முதல் மூன்று இடங்களை பள்ளி நிர்வாகமே தேர்வு செய்து முதல் பரிசாக ரூ. 500/- இரண்டாம் பரிசாக ரூ. 300/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 100/- பரிசுகள் வழங்கலாம்.
7. இப்போட்டிகளை சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்கள் 22.10.2024 தேதிக்குள்ளாக நடத்தி முடிக்கப்பட்டு, முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம் 23.10.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (இடைநிலைக் கல்வி) ஒப்படைக்கவேண்டும்.

பார்வையில் காணும், கடிதத்துடன் வரப்பெற்ற இணைப்புகள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

குறிப்பிட்ட தேதியில் பள்ளி நிர்வாகத்தால் சுவர் இதழ் வரைதல் மற்றும் கட்டுரை போட்டிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்கள் பெறும் போட்டியாளர்களின் விவரங்கள் இணைப்பில் காணும் பள்ளிகளிடமிருந்து பெற்று தொகுத்து 24.10.2024-க்குள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக தேர்தல் பிரிவிற்கு deo_vellore@yahoo.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் மற்றும் b5secceovellore@gmail.com என்ற இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலும், தேர்வு செய்யப்பட்ட மாணவர்களின் சுவரொட்டி வடிவில் சுவர் இதழ் விவரம் PDF வடிவிலும் மற்றும் கட்டுரை போட்டிக்களின் Script விவரங்கள் ஒரு நகல் மற்றும் CDயிலும் பதிவு செய்து சார்ந்த பள்ளிகளிடமிருந்து பெற்று தொகுத்து 26.10.2024 அன்று மாலை 4.00 மணிக்குள் இவ்வலுவலக ஆ5 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு மாவட்டக் கல்வி அலவலர் (இடைநிலைக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது..

இணைப்பு -

1. இணைப்பு
2. சுவரொட்டி மாதிரி
3. பள்ளியின் பெயர் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் -

1. மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி )
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்,,
வேலூர் மாவட்டம்.

நகல் -
வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.